செய்தி வெளியீடு எண்:248 நாள்:20.05.2009

பத்திரிக்கைச் செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல்,மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை , சென்னை 16 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் கண்ட இடங்களில் மே 2009 மாதத்திற்கான மக்கள் குறைதீர் கூட்டம் 23.05.2009 அன்று காலை 10.00மணிக்கு நடத்தப்பட உள்ளது,. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல் படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கூட்டுறவுதுறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையாளருக்காக

இணைப்பு – 1

| வ.எண் | அலுவலகம் | கூட்டம் நடக்கவிருக்கும் இடம் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>246, தங்கசாலை தெரு, சென்னை 3 |
| 2 | இராயபுரம் | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி ,<br>731, டி.எச், ரோடு, தண்டையார்பேட்டை,<br>சென்னை 81 |
| 3 | பெரம்பூர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>கணேசபுரம் பிரதான சாலை, கணேசபுரம்,<br>சென்னை 39 |
| 4 | அண்ணாநகர் | கோட்டம் 67, திரு.வி.க மேல்நிலைப்பள்ளி,<br>1வது மெயின் ரோடு செனாய் நகர்,<br>சென்னை 30 |
| 5 | அம்பத்தூர் | புவனேஷ்வரி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி,<br>280 ராஜா தெரு, பாடி, சென்னை 50 |
| 6 | வில்லிவாக்கம் | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>65,பள்ளிக்கூட சாலை, கொளத்தூர்,<br>சென்னை 99 |
| 7 | திருவொற்றியூர் | பாரதியார் நகர் மக்கள் நலசங்கம்<br>பாரதியார் நகர் 2வது தெரு, பீச்ரோடு, எண்ணூர்,<br>சென்னை 57 |
| 8 | ஆவடி | அரசினர் உயர்நிலைப்பள்ளி,<br>பாலவேடு மெயின் ரோடு,<br>சென்னை 55 |
| 9 | தி.நகர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி<br>ப,எண் 21, பு.எண் 67, ரங்கராஜபுரம் பிரதான சாலை,<br>கோடம்பாக்கம், சென்னை 24 |
| 10 | மயிலாப்பூர் | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ,<br>முண்டக கன்னியம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர்,<br>சென்னை 4 |
| 11 | பரங்கிமலை | பரங்கிமலை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,<br>நடராஜன் தெரு, மூங்கில் ஏரி,<br>பம்மல் மெயின் ரோடு, சென்னை 75 |
| 12 | தாம்பரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ,<br>பொழிச்சலூர் மெயின் ரோடு, பொழிச்சலூர்,<br>சென்னை74 |
| 13 | சைதாப்பேட்டை | மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,<br>கோடம்பாக்கம் ரோடு,<br>சைதாப்பேட்டை, சென்னை 15 |
| 14 | ஆயிரம் விளக்கு | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>எண் 2/ 99 படவட்டம்மன் கோயில் தெரு,<br>கொசப்பேட்டை, சென்னை 12 |
| 15 | சேழிங்கநல்லூர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி, ராஜீவ் காந்தி சாலை,<br>சோழிங்கநல்லூர், சென்னை 119( சோழிங்கநல்லூர் சிக்னல் மற்றும் ஆவின் பால் நிலையம் அருகில்) |
| 16 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி<br>1 வி.ஆர் பிள்ளைதெரு. திருவல்லிக்கேணி, செ 5 |

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.